**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.51/2015**

2026—ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

P.W.1 சதாசிவம், வயது 56, த/பெ வரதராஜன்

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா சொத்தை என் தந்தை 1983ம் ஆண்டு என் அக்காக்களுக்கு மற்றும் எனக்கும் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த சமயத்தில் தாவா சொத்திற்கு மேற்கு புறம் உள்ள வீடானது ஓட்டு வீடாக இருந்ததா அல்லது மெத்தை வீடாக இருந்ததா என்றால் ஓட்டு வீடாகதான் இருந்தது. தாவா வாதுரையில் 5வது பத்தி மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் நான் பிரதிவாதிகள் இடத்தை அளக்க விடாமல் தடுக்கிறார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் எந்த தேதி, மாதம், வருடம் அளக்க சென்றேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. நான் வருவாய்துறை மூலம் அளக்க சென்றேனா அல்லது தனி நபர் மூலம் அளக்க முயன்றேனா என்றால் வட்டாட்சியர் மற்றும் சர்வேயர் மூலம் அளக்க முயன்றேன். மேற்படி வட்டாட்சியர் மூலம் அளக்க வேண்டும் என்றால் கட்டணம் செலுத்தி ரசீது பெற்றுதான் அளக்க முடியும் என்றாலும், ரசீது பெற்றுள்ளேனா என்றால் கட்டணம் செலுத்தி ரசீது பெற்றேன். மேற்படி ரசீதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சட்டப்படி இடத்தை அளக்க வேண்டும் என்றால் கட்டணம் கட்டி ரசீது பெற்று எதிர் தரப்பினருக்கு அறிவிப்பு அனுப்பிய பின்தான் இடத்தை அளப்பார்கள் என்றால் சரிதான், இவ்வழக்கில் பிரதிவாதிகளுக்கு மேற்படி அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் வாய்மொழியாகதான் சொன்னார்கள்.

3. நான் தாவா இடத்தை அளக்கவில்லை என்றாலும், அளப்பதற்கு கட்டணம் செலுத்தி ரசீது பெறவில்லை மற்றும் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பவில்லை என்பதால்தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும், நான் இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1983ல் என் பெயருக்கு தந்தை எழுதி வைத்தார், அப்போது நான் மைனராக இருந்தேன், 1989ம் ஆண்டு நான் மேஜர் ஆனதால் அதன் பின்னிட்டு 1989ம் ஆண்டிலிருந்து தாவா சொத்தை நான்தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். 1989க்கு பிறகு எத்தனை வருடங்கள் கழித்து உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா என் பெயரில் பெற்றேன் என்றால் சுமார் 25 வருடங்களுக்கு முன்பு என் பெயரில் பட்டா பெற்றேன்.

4. நான் சுமார் 25 வருடங்களுக்கு முன்பே என் பெயரில் பட்டா பெற்றேன், ஆனால் தாவா சொத்தில் 4 அடி குறைந்துள்ளது என்ற விவரம் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் எனக்கு திருமணம் நடைபெறுவதற்கு முன்பு 35 வருடத்திற்கு முன்பே தெரியும். தாவா சொத்தை 2ம் பிரதிவாதி என் அக்காக்கள் வேண்டா, விருதம்மாளிடம் இருந்து எப்போது கிரையம் பெற்றார் என்றால் 35 வருடங்களுக்கு முன்பாகும். என் அண்ணியான 2ம் பிரதிவாதி 1990ம் ஆண்டில் கிரையம் பெற்றது முதல் அவர்தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி மேற்படி இடத்தை புதியதாக எந்த கட்டிடமும் கட்டவில்லை என்றாலும், கிரையம் வாங்கிய போது எவ்வாறு இருந்ததோ அப்படியே இருக்கிறது என்றால் சரிதான்.

5. 1983ல் என் தந்தை என் அக்காக்களுக்கு தானசெட்டில்மெண்ட் செய்த சமயத்திலிருந்து அதன் பின்னிட்டு 1990ம் ஆண்டு 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றதிலிருந்து இன்றுவரை இடமானது அதேப்போல்தான் உள்ளது என்றால் சரிதான். 1983ல் என் தந்தை எனக்கு உயில் எழுதி வைத்த சமயத்திலிருந்து இன்றுவரை தாவா சொத்தானது அதேப்போல்தான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் நான் தாவா வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் என் இடமான 4 அடியை ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி வந்தார்கள் என்று பொய்யான சங்கதிகளை கொண்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு 24 அடி உள்ளது என ஆவணம் என்னிடம் உள்ளது.

6. என் அப்பா என் அக்காக்களுக்கு 1983ல் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்த பின்னர்தான் எனக்கு உயில் எழுதி வைத்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. என் அப்பா என் அக்காக்களுக்கு 1983ல் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தபடி சொத்து விவரத்தில் கி x மே 24 அடி, வ x தெ 19 அடி என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு 1990ம் வருடம் 2ம் பிரதிவாதி என் அக்கா வேண்டா, விருதம்மாள் ஆகியோரிடமிருந்து கி x மே 24 அடி, வ x தெ 19 அடியாக கிரையம் பெற்றார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரத்தை பற்றி தெரியாமல் எனக்கு மேற்கு பக்கம் 4 அடி குறைகிறது என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் உயில் ஆவணத்தை பார்த்துதான் எனக்கு 24 அடி என்று சொல்கிறேன்.

7. தாவா சொத்தை பற்றி எதுவும் தெரியாமல் மற்றும் அளவீடுகள், யார் யாரிடம் கிரையம் பெற்றார்கள் மற்றும் வருவாய் துறை ஆவணம் மற்றும் கிரையம் பெற்ற ஆவணங்கள் அளவுகள்படியும் எதுவும் தெரியாமல் நான் பிரதிவாதிகளின் உறவினர்கள் மற்றும் குடும்ப பிரச்சினை காரணமாக அவர்களை அலைகழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, பத்திரம் பார்த்ததில் இருந்துதான் குடும்பத்தில் பிரச்சினை ஏற்பட்டது. என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் நான்தான் கையொப்பமிட்டேன் என்றால் சரிதான். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் சுமாராக படிக்க தெரியும்.

8. மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 4ம் பத்தியில் உயில் எழுதிய அதே தேதியில் 12.12.1983 அன்று என் தந்தை எனது தங்கை வேண்டா, விருதம்மாள் என்பவர்களின் திருமண செலவிற்காக தாவா இடத்திற்கு மேற்குபக்கம் காலியிடத்தை பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் மூலம் கொடுத்துள்ளார் என்றால் தவறுதான். அதேப் பத்தியில் என் தங்கையை ஏமாற்றி பணம் தராமல் அவருக்கு சொந்தமான சொத்தை 2ம் பிரதிவாதி எழுதி

வாங்கி கொண்டார் என்றாலும், மேற்கு பக்கம் 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து வருகிறார் என்றால் சரிதான்.

9. மேற்படி சம்பவத்திற்கு தொடர்ச்சியாக நானும் என் அக்காவும் காவல் நிலையத்தில் இது சம்மந்தமாக புகார் அளித்துள்ளோமா என்றாலும் நீதிமற்த்தில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அவ்வாறே நடந்திருந்தாலும், ஏன் இவ்வழக்கில் வேண்டா, விருதம்மாளை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் பிரச்சினையில் நான் தலையிடாமல் என் தாவா இடத்திற்கு மட்டும் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சம்பவம் நடந்திருந்தால் என் அக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பார் அல்லது வழக்கு தாக்கல் செய்திருப்பார் என்றால் அவ்வாறு நடக்காததால்தான் எதுவும் செய்யவில்லை என்றால் அவர்கள் பயந்து எதுவும் செய்யாமல் விட்டார்கள்.

10. நான் இவ்வழக்கிற்காக நடக்காத சம்பவத்தை நடந்தது போல் பொய்யாக கூறினேன் என்றால் சரியல்ல. அதேப் போல் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 5வது பத்தியில் A,B,C,D என குறிப்பிட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் வருவாய் ஆவணத்தை சரி பார்க்காமல் மற்றும் வருவாய் துறை மூலம் அளவீடு செய்யாமல் நான் இவ்வழக்கில் 4 அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர் அளவீடு செய்த பின்தான் நான் 4 அடி ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று வழக்கு தாக்கல் செய்தேன்.

11. மேற்படி கிராம நிர்வாக அலுவலர் எனக்கு மேற்கு பக்கம் 4 அடி உள்ளது என்று சொல்லி ஏதேனும் ஆவணம் மற்றும் அறிக்கையை கொடுத்து அதனை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அளந்துதான் எங்களுக்கு பட்டா வழங்கினார்கள். பிரதிவாதிகள் இடத்திலிருந்து கிழக்கு பக்கம்தான் என்னுடைய தாவா

சொத்து உள்ளது என வரைபடம் கொடுத்து பட்டா வழங்கினார்கள் என்றால் கிழக்கிலிருந்து மேற்கிற்குதான் கொடுத்தார்கள். மேற்கு பக்கம்தான் எனக்கு தாவா இடம் வருகிறது என்பதற்கு ஏதேனும் அறிக்கை கொடுத்தார்களா என்றால் இல்லை, பட்டா கொடுத்தார்கள். தாவா சொத்தை என் அக்கா வேண்டாவிற்கு 1995ம் ஆண்டு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான், 12 அடி மட்டும்தான் கிரையம் கொடுத்தேன், மீதம் 12 அடி என் வசம் உள்ளது.

12. கிரையம் கொடுத்த போது நான் அளந்து கொடுத்தேனா அல்லது அளக்காமல் கொடுத்தேனா என்றால் அளந்துதான் கொடுத்தேன். என்னுடைய இடத்திற்கு கிழக்கு பக்கம்தான் கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு என் அக்கா வேண்டா என்பவருக்கு கிரையம் கொடுத்த சொத்தை நான் எப்போது கிரையம் பெற்றேன் என்றால் சுமார் 10 வருடத்திற்கு முன்பு கிரையம் பெற்றேன். நான் கிரையம் கொடுத்த பின்னிட்டு என் அக்காவிற்கு அனுபவத்தை கொடுக்காமல் அவரை அடித்து மிரட்டி மீண்டும் என் பெயரில் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல.

13. நான் எவ்வளவு கிரைய தொகை கொடுத்து கிரையம் பெற்றேன் என்றால் ரூபாய் 1 லட்சத்து 5 ஆயிரம் கொடுத்தேன். நான் சொத்தை என் அக்காவிடமிருந்து கிரையம் பெற்ற பின்னிட்டுதான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் அக்காவிற்கு கிரையம் கொடுத்து பின்னர் நான் அவரிடமிருந்து கிரையம் பெற்ற விவரங்களை என் தாவா வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் மேற்படி சொல்லிய சங்கதிகள் யாவும் தாவா வாதுரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், நான் தற்போதுதான் நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல, நான் விவரங்களை சொல்லியுள்ளேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni